# பெறுகை அறிவித்தல்

# அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-39

## அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் துப்புரவு சேவைக்காக விலைமனுக் கோரல்

கொழும்பு 08, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இலக்கம் 118 இல் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்கள வளவில் முன்மொழியப்படும் இடங்கள் தொடர்பில் துப்புரவு சேவையை மேற்கொள்வதற்கு கீழுள்ள தேவைகளை பூர்த்தி செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட விலைமனுதாரர்களுக்கு மாத்திரம் ஓர் ஆண்டு காலத்திற்காக (2022/ 2023) தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரலின் கீழ் 2022.03.29 ஆம் திகதி தொடக்கம் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

இதற்காக உங்களால் பூர்த்தி செய்ய வேண்டிய அடிப்படை தகைமைகள் பின்வருமாறு.

1. வர்த்தகப் பெயர் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேலுள்ள சேவைக்காக பதிவு செய்திருத்தல்.
2. அரசின் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு துப்புரவு சேவை வழங்கல் தொடர்பில் முன்நிபந்தனையாக குறைந்தது 03 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு, தற்போதும் அவ்வாறான நிறுவனங்களுக்கு சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும். (கருத்தில் கொள்ளவும் - கோரிக்கை கடிதத்துடன் மேலுள்ள இலக்கம் 1, 2 தகைமைகளை குறிப்பிடும் குறித்த சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட நிழற்பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்)

| | | |
|---|---|---|
| பெறுகையின் பெயர் | - | அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்கு துப்புரவு சேவையை நடத்திச் செல்லல். |
| விலைமனுக் கோரல் இறுதித் திகதி | - | 2022.04.12 |
| ஒப்பந்த இலக்கம் | - | DGP/OS/04/Clean.S./2022-2023 |
| விலைமனு திறப்பது | - | 2022.04.12 பி.ப. 2.00 |

3. விலைமனுக்கள் தொடர்பில் ஆவணங்களை வழங்குநரின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் எழுத்துமூல கோரிக்கை விடுத்து, கீழுள்ள முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வேறு வழங்கல் பிரிவில் இருந்து வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா வைப்புத் தொகை ஒன்றை அரசாங்க அச்சகத் தலைவரிடம் இலங்கையின் செல்லுபடி நாணயமான ரூபாவில் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, விலைமனுக்களை நிறைவு செய்யும் திகதிக்கு முந்தைய தினத்தின் பி.ப. 2.00க்கு முன்னர் குறித்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
4. 2022.03.29 ஆம் திகதி தொடக்கம் 2022.04.11 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை திணைக்களத்தின் வேறு வழங்கல் பிரிவில் குறித்த பெறுகை ஆவணங்களை கட்டணம் செலுத்தாது பரீட்சித்து பார்க்க முடியும்.
5. முறையாக பூர்த்தி செய்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விண்ணப்பங்களை குறித்த திகதியில் குறித்த நேரம் முடிவதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது திணைக்களத்தில் வேறு வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதை மேற்கொள்ளல் வேண்டும். பெறுகை ஆவணங்களை இடுகின்ற உறையின் இடது மேல் மூலையில் பெறுகையின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். உங்களது விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற உறையில் "அரசாங்க அச்சுத் திணைக்கள துப்புரவு சேவைக்கான விலைமனு 2022/ 2023" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
6. 2022.04.12 ஆம் திகதி பி.ப. 02.00க்கு விலைமனுக் கோரல் முடிவுறுவதோடு, அந்த நேரத்திலேயே திறக்கப்படும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022.04.04 ஆம் திகதி மு.ப. 10.00க்கு திணைக்கள வளவில் இடம்பெறும்.
8. மேலதிக விபரங்கள் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 3.30 வரை கீழுள்ள முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் வேறு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**
**இலக்கம் 118, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 08**
**2022.03.29**
**தொலைபேசி: 0112673311/ தொலைநகல்: 011 2698653**
**இணையதளம் www.documents.gov.lk**
**மின்னஞ்சல்: othersupplydgp@gmail.com**